Registered as a Newspaper

Wyman English Language Institute
Spoken English
by
S. B. IYAR
புதிய பிரிவுகள் ஆரம்பம்
16 - 01 - 1987
திங்கள்/புதன்/வெள்ளி
இரவு 6 - 7 மணி
12, வைமன் வீதி,
நல்லூர்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

Wyman English Language Institute
Spoken English
by
S. B. IYAR
புதிய பிரிவுகள் ஆரம்பம்
16 - 01 - 1987
செவ்வாய்/புதன்/வியாழன்
மாலை 3 - 4 மணி
12, வைமன் வீதி,
நல்லூர்.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ மார்கழி மீ 29 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 12 (13 01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுதிர் 41

# புலிகளுடன் மீண்டும் பேச அரசாங்கம் தீவிர முயற்சி

## பொருளாதார தடையை தளர்த்துவது குறித்து பரிசீலனை

கொழும்பு, ஜன. 13

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்க உயர்மட்டம் தீவிரமுயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக கொழும்பில் அரசாங்க வட்டாரங்களில் இருந்து நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

இதேவேளை அரசு விடுத்த அழைப்பை புலிகள் நிராகரித்துவிட்டதாகவும் இங்கு கூறப்படுகிறது.

அரசின் நல்லெண்ணத் தூதுக் குழுவுக்குத் தலைமைவகித்துவந்த பிரமுகரான எட்டியாந்தோட்டை எம்.பி. திரு. வின்சென்ட் பெரேரா மூலமே முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அறியவருகிறது.

எரிபொருள் தடை, இராணுவத் தாக்குதல்கள் காரணமாகத்தான் அழைப்பைப் புலிகள் நிராகரித்து விட்டன என்று அரச கருதுகிறது.

இதனால் நேரடிச் சந்திப்பைச் சாத்தியமாக்குவதற்காக இந்தத்தடைகளைத் தளர்த்துவது பற்றியும் அரசு வட்டாரங்கள் தீவிரமாக ஆலோசித்துவருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-எ)

## வவுனியாவில் அரசாங்கப் படை பலப்படுத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 13

வவுனியா மாவட்டத்தில் சிப்பாய்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஈரப்பெரியகுளம், வவுனியா, ஓமந்தை ஆகிய இடங்களில் உள்ள முகாம்களுக்கு நேற்று அதிகப்படியான ஆயுதப் படையினர் ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டுவரப்பட்டனர்.

போராளிகளின் திடீர் தாக்குதல் நடவடிக்கைகளை எவ்வாறு முறியடிக்கலாம் என்பது குறித்து இராணுவ ஒத்திகைகளும் முகாம்களுக்குள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இரவு நேரங்களில் சிப்பாய்களின் ரோந்துச் சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (உ-10)

## விதிக்கு குறுக்கே தடை!

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ் மணிக்கூண்டுக் கோபுரவீதி பொதுமக்களின் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

மணிக்கூண்டுக் கோபுரத்தடிவரை மட்டுமே பொதுமக்கள் செல்லக் கூடியதாக உள்ளது.

அப்பால் வீதியின் குறுக்கே ரயர்களும் பழைய பரல்களும் அடுக்கப்பட்டுள்ளன.

அதேசமயம்ஏற்கனவே போடப்பட்ட தடைகளை விடுதலைப்புலிகள் பலப்படுத்தி வருகின்றனர். (இ-10)

## மர்மமாக மறைந்த தமிழ் அதிகாரியின் படம்

### மன்னிப்புச் சபை பிரசுரிப்பு

லண்டன், ஜன 13

1984 டிசம்பரில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒதியமலையில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் காணமற் போனவர்கள் என்று கருதப்படும் 100 தமிழரில் ஒருவரான தொழில்நுட்ப அதிகாரி லினஸ் அலோசியஸ் பிராங்ளினின் படம் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஜனவரி மாத செய்திக் குறிப்பில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது.

கைது செய்யப்பட்ட சமயம் இவர் சேமடு நீர்ப்பாசன திணைக்களத்தில் தொழில்நுட்ப அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். திருமணமானவர். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான அவர் 2-12-84இல் கைது செய்யப்பட்டார். (உ-எ)

## 4 பெண்கள் சுட்டுக் கொலை

சண்டிகார், ஜன. 13

பஞ்சாப் மாநிலத்தில் நான்குபெண்கள் சீக்கியத் தீவிரவாதிகளால் நேற்றுக்கொல்லப்பட்டனர். (உ-எ)

## ஓலை வீடுகளுக்குத் தீ வைக்கும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்- பண்ணை வீதி, கொட்டடி கடற்கரை வீதி ஆகிய பகுதிகளில் உள்ள பல ஓலைவீடுகள் கறுப்புச் சீருடையினரால் தீ வைத்துக் கொளுத்தப் படுகின்றன.

இதே வேளை இரவு நேரங்களில் இப்பகுதியில் சிப்பாய்கள் நடமாடித் திரிவதாகவும் கூறப்படுகின்றது.

சிப்பாய்கள் தற்பொழுது தங்கியிருக்கும் அனாதைச் சிறுவர் இல்லம், சனசமூகநிலையம், மார்பு சிகிச்சை நிலையம் என்பன மண்மூடைகள் அடுக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம்

## பிரதான வீதிகளில் பன்றிகள் 'பவனி'!

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்நகரில் பஸ்நிலையத்தை அண்டியுள்ள பிரதான வீதிகளில் பன்றிகளின் 'பவனி' இப்பொழுது மீண்டும் சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது.

நகரில் கடைகளின் முன்னால் குப்பைவாளிகள் நிறைந்திருப்பதாலேயே பன்றிகள் இங்கு 'பவனி' வரத்தொடங்கியுள்ளன.

பன்றிகளால் மூளைக் காய்ச்சல் பரவுவதாக வைத்திய வட்டாரங்கள் அண்மையில் எச்சரிக்கை

(4ஆம்பக்கம் பார்க்க)

## எரிபொருள் தடை; பாதுகாப்புச் சபை நீண்டநேரம் ஆராய்வு

கொழும்பு, ஜன. 13

தேசிய பாதுகாப்புச் சபை நேற்று மாலை கூடி வடபகுதி மீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடை பற்றி ஆராய்ந்தது.

சுமார் ஒரு மணி நேரம் இக்கூட்டம் நடைபெற்றது.

தீவுப்பகுதிக்கான உணவுப் பொருள் விநியோகம்—

ஆஸ்பத்திரி, போக்குவரத்துச் சபை வாகனங்களுக்கு எரிபொருள்

(4-ம் பக்கம் பார்க்க)

எரிபொருள் தடையினால்

## சட்டவிரோதமான மின்பாவனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

எரிபொருள் தடை காரணமாக யாழ் குடாநாட்டில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது.

பாவனைக்குத் தேவையான மண்ணெண்ணெய் கிடைக்காததால் பொதுமக்கள் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெறுவதில் நாட்டம் காட்டி வருகிறார்கள்

அதிகமாக விவசாயிகளே பெற்றோல், மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை இயக்குவதற்கு சட்டவிரோதமாக மின்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டானில் நேற்று புலிகள் நேரடிச் சமர்!

யாழ்ப்பாணம், ஜன. 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் இராணுவமுகாமில் இருந்து வெளியேவந்த சிப்பாய்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

முகாமிலிருந்து சுமார் 600 யார் தொலைவில் உள்ள சின்னத்தம்பி வித்தியாசாலைக்கு அருகில் வந்த சிப்பாய்கள் திரும்பிப் போய்க்கொண்டிருக்கையிலேயே, இம்மோதல் ஏற்பட்டது.

முகாமுக்கு வெளியே அகப்பட்டுக் கொண்ட சிப்பாய்களுக்கு உதவி செய்வதற்கு முகாமில் இருந்து வெளியேவர முயற்சித்த இராணுவக் கவசவாகனம் ஒன்றின் மீதும் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதனால் கவசவாகனம் முகாமுக்குத் திரும்பி விட்டது

இம் மோதலில் 2 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர் என்பது தெரியவருகின்றது.

முகாமுக்குத் திரும்பிய சிப்பாய்கள் பின்னர் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் நேற்றுநண்பகல் அளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று ஒட்டிசுட்டான் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது (இ-எ-10)

## மண்மூடைகளினால் தொலைதொடர்பு திணைக்களம் பலப்படுத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ் தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் முக்கிய பகுதிகளில் மண்மூடைகள் அடுக்கப்பட்டு அதற்குமேல் நவீன ரக பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

தொடர்ந்தும் சிப்பாய்கள் திணைக்களத்தைப் பலப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இதே வேளை மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்தும் சிப்பாய்கள் நேற்று வெளியேறி சில வீடுகளில் புகுந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (இ-10)

### சுபநேரம்

13 - 01—1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

11. 03முதல் 12 33 வரை

ராகுகாலம்:

3.33 முதல் 5 03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின்

## ஆயிரம் ஊழியர்கள் சம்பளம் இழக்கும் நிலை!

யாழ்ப்பாணம், ஜன. 13

வட பிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்களின் குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டுக்கான எரிபொருள்தடை காரணமாக போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப் பட்டுள்ளன. இதனால் ஊழியர்கள் மாத வருமானத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

தினமும் நடைபெறும் பஸ் சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்துதான் இந்த ஊழியர்களுக்கு மாதாந்த வேதனங்கள் வழங்கப்பட்டு வந்தன.

எனினும் தற்பொழுது குடாநாட்டு உள்ளூர் சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்கள் முற்றிலும் வருமானத்தை இழக்கும் சூழ்நிலை உருவாகியிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முனி



கொஞ்சம் கொஞ்சமா உவர் உத்தமருக்கு உண்மைகளும் தெரியுது எண்டு நினைக்கிறியளே...!

அவருக்கு உதுகள் எப்பவோ தெரியும். இப்பதான் கொஞ்சம் படியிறங்க யோசிக்கிறார்... அவ்வளவுதான்!

## 180 பேர் பூஸாவுக்கு

மட்டக்களப்பு ஜன 13

மட்டக்களப்பு மாவட்ட ஆயுதப்படை முகாம் ளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களில் சுமார் 180 பேர் நேற்றுப் பூஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

18 தொடக்கம் 30 வயதுக்குட் பட்டவர்களே பூஸாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (உ-ஐ-எ)

## தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்கள் தெற்கிலிருந்து வருவர்?

யாழ்ப்பாணம் ஜன 13.

தென் இலங்கையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை வருவித்து அவர்களைக் கொண்டு யாழ். தொலைத் தொடர்பு திணைக்களத்தை இயங்கச் செய்வதற்குஅரசுஆலோசித்து வருவதாகத்தெரிய வருகிறது.

தொலைத் தொடர்பு சாதனங்கள் சரியாகப் பராமரிக்கப்படாவிடில் தொலைபேசிச் சேவை பழுதடைந்து விடும் என்பதாலும்:-

இங்குள்ள உத்தியோகத்தர்கள் இராணுவம் குடி கொண்ட அலுவல

(4-ம் பக்கம் பார்க்க)

தனிநாடு அமைப்பதை அனுமதிக்க முடியாதாம்

## வடக்கில் தமிழ் அரசு இருந்தது உண்மைதான்

### ஒப்புக்கொள்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 13

400, 500 ஆண்டுகளுக்கு முன்னர் வடபகுதியில் ஒரு தமிழர் அரசு இருந்தது உண்மைதான். ஆனால் தற்போதைய ஐக்கிய இலங்கைக்குள் தமிழருக்கெனத் தனிநாடு அமைப்பதை அனுமதிக்க முடியாது.

இப்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று அறிவித்தார்.

இலவச பாடப்புத்தக விநியோகம் நேற்று வியலுவயில் வைத்து வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி இப்படிச் சொன்னார்.



அவர் மேலும் கூறியதாவது:-

தனிநாட்டுக் கோரிக்கைக்கு இந்த நாட்டில் அறவே இடம் இல்லை.

ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். தமிழர்களின் சட்ட பூர்வமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய எனது அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

பயங்கரவாதம் மூலம் தனிநாடு அமைக்க முயற்சிக்கின்றார்கள். இதை அரசாங்கம் முறியடிக்கும்.

--இப்படி திரு. ஜெயவர்த்தன தெரிவித்தார். (உ-எ-1)

## கல்விப் பணிப்பாளர் நாளை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் நாளை முதல் இட மாற்றம் பெறுகின்றனர்.

இதற்கான பணிப்புகளை கல்வி அமைச்சு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது.

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கிளிநொச்சிக்கும், கிளிநொச்சி பிரதேச கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் யாழ்ப்பாணத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாளை முதல் தமது புதிய இடங்களில் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வார்கள்.

யாழ் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஏற்கனவே 6-1-87ஆம் திகதி உதயனில் முகற்பக்கச் செய்தி வெளியானது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். (இ-5)

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதா?

## கிறிஸ்தவ குழு சுவிஸில் சத்தியாக்கிரகம் நடத்தும்

பேர்ன், ஜன. 12

40 இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு நாடு கடத்தும் சுவிஸ் அரசின் நடவடிக்கையை ஆட்சேபித்து, பேர்னில் உள்ள கிறிஸ்தவ தேவாலயக் குழு சத்தியாக்கிரகம், ஆர்ப்பாட்டம் போன்ற ஜனநாயக முறையிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

இது பற்றி கிறிஸ்தவ தேவாலயக்குழு சுவிஸ் அரசுக்கு அறிவித்திருக்கிறது.

இம்மாத முடிவுக்குள் 40 இலங்கைத் தமிழரையும் கொழும்புக்குத் திருப்பி அனுப்பும் முயற்சியில் சுவிஸ் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதனிடையில் இலங்கைத் தமிழ் அகதிகளை கொழும்புக்குத் திருப்பி அனுப்புவதை சுவிஸில் உள்ள உயிர்காக்கும் படையும் பலமாக எதிர்த்துள்ளது. (மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்) (உ-ஐ-எ)

## மறியற் போர் தொடரும் என்கிறது

### அடகு வைத்தோர் சங்கம்

யாழ்ப்பாணம் ஜன, 13

தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை மக்கள் வங்கி முன் மறியல் போராட்டம் தொடரும் என்று அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அடகு வைத்தோர் சங்கம் விடுத்த அறிக்கை வருமாறு:-

கடந்த வருடம் 18-12-86 இலிருந்து வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக அடகு வைத்தோர் சங்கத்தினால் தொடர்ச்சியாக மறியல் போராட்டம் நடத்தப்பட்டுவருகிறது.

பிராந்திய நிர்வாகத்திடமிருந்தோ தலைமைப் பீடத்திலிருந்தோ இது

(4ம்-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

### தேவை

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு படப்பிடிப்பாளர் தேவை படப்பிடிப்புடன் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் தெரிந்தவராக இருக்க வேண்டும். விளம்பரஎண்: 42, மே/பா. உதயன், த. பெ. எண்; 13, யாழ்ப்பாணம்.

புதிதாக ஆரம்பிக்கப் படவிருக்கும் நூலகத்திற்கு அனுபவமுள்ள நூலகர் உடன் தேவை. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: விளம்பர எண். 48, மே / பா. உதயன், யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு ஓவியர் தேவை ஆற்றல், அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விளம்பர எண்: 47, மே / பா. உதயன், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

யாழ் நகர

# சுகாதார நிலைமை மோசமடைகிறது

## சுத்திகரிப்பு வேலைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜன 13

யாழ் குடாநாட்டிலும் யாழ் நகரிலும் நகர சுத்திகரிப்பு வேலைகள் நடைபெறுததால் சுகாதார நிலைமை மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது

நகரப்பகுதிகளில் குப்பை தேங்கி துர்நாற்றம் வீச ஆரம்பித்திருப்பதுடன் தொற்றுநோய் அபாயமும் ஏற்பட்டிருக்கிறது.

எரிபொருள் தடையினால் யாழ் மாநகரசபையின் சுத்திகரிப்பு வேலைகள் யாவும் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

யாழ். குடாநாட்டில் உள்ள தேநீர்க் கடைகளின் சுகாதார நிலைமையும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது

பல கடைகளில் உள்ள குப்பை வாளிகளில் சாப்பாட்டு இலைகளும் தேயிலைச் சக்கையும் தேங்கிக் கிடக்கின்றன.

(இ-10)

### விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஜன. 13

திருநெல்வேலி இராம கிருஷ்ணாலயத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணியளவில் இந்திய ஹோமா ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் எஸ். ஜி. முலேயின் விரிவுரைகள் இடம்பெறும்.

''தனிப்பட்ட முறையில் ஹோமம் செய்யும் முறையும் அதனால் ஏற்படும் பலாபலன்களும் நோய்களைத் தீர்க்கும் முறைகளும்'' என்ற பொருள் பற்றிய பேராசிரியருடனான கலந்துரையாடல்களும் இடம்பெறும்]

(இ-5)

## மக்களுக்காகவே கலை படைக்கப்பட வேண்டும்

### விமர்சன அரங்கில் உரை

கரவெட்டி, ஜன. 13

மக்களுக்காகவே கலைகள் படைக்கப்பட வேண்டும். அப்படைப்புக்கள் மக்களுக்கு பயன் அளிக்கக்கூடியவையாக இருக்க வேண்டும்.

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்க கலாசார கூட்டுறவு பெருமன்றத்தின் திரைப்பட வட்டத்தினால் 'பசி' திரைப்பட விமர்சன அரங்கு நடைபெற்றது.

அதில் உரையாற்றிய வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம் மேற்கண்டவாறு கூறினார்.

திரைப்படத்தின் கருத்தை மட்டும் நாம் எடுக்காது, காலத்திற்கேற்ப தயாரிப்பு, காட்சியமைப்பு, படப்பிடிப்பு போன்றவற்றிலும் கவனம் செலுத்திப் பார்க்கும் போது 'பசி' படம் தற்காலத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது. என்றும் அவர் கூறினார்.

கட்டைவேலி நெல்லியடி ப நோ கூ சங்க கலாசார பெருமன்றத் தலைவர் திரு. கே சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில், எமது பகுதி எழுத்தாளர்களையும், கலையையும் வளர்க்கும் வகையில் மேலும் திரைப்படக் காட்சியை நடத்தி விமர்சன அரங்குகளையும் நடத்துவோம் என்றார்.

கலாசார பெருமன்ற செயலாளர் திரு நெல்லை க. பேரன், குப்பிளான் ஐ. சண்முகம், புத்தகசாலை அதிபர் திரு. குலசிங்கம் ஆகியோரும் தமது கருத்துக்களை வெளியிட்டனர்

இதேவேளை இம்மாத இறுதிக்குள் தென்னிந்திய திரைப்படமாகிய ''பாலைவனரோசாக்கள்'' பட விமர்சனம் இடம்பெறும் எனவும் கலாசார பெருமன்றம் அறிவித்துள்ளது (இ-70)

## அனுபவம் இல்லாமல் எதனையும் சாதிக்கமுடியாது

### சேவை நலன் பாராட்டில் உரை

வேலணை, ஜன 13

அனுபவம்தான் முக்கியம். அனுபவம் இல்லாமல் சில காரியங்களைச் செய்வது மிகவும் கஷ்டம்.

வேலணை முன்னாள் உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரத்துக்கும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றி இளைப்பாறியும், இடம் மாற்றலாகியும் சென்றுள்ள உத்தியோகத்தர்களுக்கும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு தா. சந்திரசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில், இக்கட்டான சூழ்நிலையிலே, குறுகிய காலத்திலே உதவி அரசாங்க அதிபரின் நல்ல சேவையைப் பெற்று தீவுப்பகுதி மக்கள் பல நன்மைகளைப் பெற்றுள்ளனர் என்றார்.

வேலணை விசேட சேவை உத்தியோகத்தர் திரு. கா. கணேசலிங்கம் தமது உரையில் இலங்கையில் நிர்வாக சேவையிலே குறைந்த வயதினிலே அதுவும் ஒரு பெண்ணாக முதன் முதலில் உதவி அரசாங்க அதிபர் பதவியைப் பெற்று தீவுப்பகுதியிலே கடமையாற்றினார் என்றால் அது செல்வி மைதிலி சோமசுந்தரம் அவர்களையே சாரும் என்றார்.

சேவைநலன் பாராட்டு விழாவில் கிராமசேவை அலுவலர்கள் திரு. செ. சச்சிதானந்தன், திரு வை. வடிவேலு, திரு. என், சுந்தரராஜன், திரு. கணேசவேல், விசேடசேவை உத்தியோகத்தர் திரு. சோ. சச்சிதானந்தன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பு. குணரத்தினம், பிரதம எழுதுவினைஞர் திரு ம பாலசிங்கம் ஆகியோரும் பேசினர். (இ-167)

வடபகுதி எரிபொருள் தடை:

## மனிதாபிமான முறையில்

### அணுகுமாறு டிக்ஸிற்றுக்கு மகஜர்

கரவெட்டி, ஜன 13

பொருளாதாரப் பேசரின் முதற்கட்டமாக தற்போது வடபகுதியில் அரசு அமுல்படுத்தியுள்ள தடைகளுக்கு எதிராக மனிதாபிமான முறையில் செயற்படுக

இந்தியத் தூதுவர் திரு டிக்ஸிற்றுக்கு கரவெட்டி மேற்கு மத்தொணி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினால் அனுப்பப்பட்டுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக அமுல்படுத்தி உள்ள இராணுவ ஆட்சிமூலம் அப்பாவித் தமிழர் பலர் கோரமான முறையில் படுகொலை செய்யப்படுகின்றனர்.

மேலும் பலர் கல்வி, உடைமைகள் அனைத்தையும் இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் மீது பொருளாதாரத் தடையையும் அரசு விதித்துள்ளது.

எமது உரிமைகளைப் பெறுவதற்கும் இலங்கை அரசின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் நாம் உங்களின் உதவியை வேண்டுகிறோம்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(இ-70)

### வாகீஸ்வரி ச. ச. நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 13

கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலைய நூல் நிலைய திறப்புவிழா நாளை தைப்பொங்கல் திருநாளில் நடைபெறவுள்ளது.

யாழ் விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு நூல் நிலையத்தைத் திறந்து வைப்பார்.

(ஒ-5)

தென்னோலை, பனை, தேங்காய் ஆகியவற்றுக்கான

கேள்வி

ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் தோட்டங்களில் 87ஆம் ஆண்டுக்கான மேற்குறிப்பிட்டவற்றின் கேள்விகள் 19-01-87ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு எமது கண்டி ரோட்டின் 177ஆவது கட்டையில் அமைந்துள்ள வெட்டுக்காடு தோட்டக் காரியாலயத்தில் நேரடிக் கேள்வியாக ஏற்கப்படும். கேள்வியின் அரைவாசித் தொகை உடனடியாகச் செலுத்த வேண்டும். பனை, தேங்காய்க்கான நேரடிக் கேள்வி ஒவ்வொரு மாதமும் 1ஆம் திகதி கேட்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
J,E.D B.,
பளை.

## மக்கள் முகம்

### ஆரம்ப சுகாதார நிலையத் தொண்டர் குழு

சாவகச்சேரி, ஜன. 13

நுணாவில் மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத் தொண்டர் குழு உறுப்பினர் வருமாறு:- காப்பாளர் திருமதி நாகேஸ்வரி அருமைத்துரை (குடும்பநல சேவையாளர்) தலைவர்:- திருமதி பரமேஸ்வரி பரம்சோதி உபதலைவர்:- செல்வி சியாமளி சிங்கராசா செயலாளர்:- செல்வி சசிகலாதேவி இராசையா பொருளாளர்:- செல்வி ரேணுகா சங்கரப்பிள்ளை உபசெயலாளரும் உபபொருளாளரும் செல்வி ஜெயக்குமாரி கனகரத்தினம் செயற்குழு உறுப்பினர்கள் ஐவர் இடம் பெற்றுள்ளனர். (இ-31)

### ஆலய நிர்வாகசபை

புங்குடுதீவு, ஜன. 13

புங்குடுதீவு சங்கர மூர்த்தி முருக மூர்த்தி ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு. ஐயாத்துரை திரு நகுலேசபிள்ளை திரு. இராசரெத்தினம் திரு இராசலிங்கம், திரு. மகேசன் திருமதி சத்தியவதி திரு. செல்வராசா திரு இரத்தினசபாபதி திரு சுந்தர மூர்த்தி திரு. மயில்வாகனம் திரு நடராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக திரு ஐயாத்துரையும் செயலாளராக திரு. நகுலேசபிள்ளையும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மாதர் சங்கமும் தெரிவுசெய்யப்பட்டது தலைவராக திருமதி சத்தியவதியும் செயலாளராக திருமதி குமுதபால லோகேஸ்வரியும் பொருளாளராக நாகம்மாவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-131)

### சமய அறிவுப் போட்டியில் முதற் பரிசு

யாழ்ப்பாணம், ஜன. 13

வண்ணார்பண்ணை வடமேற்கு ஐயனார் கோயிலடி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட 13 ஆம் ஆண்டிற்கான சமய அறிவுப் போட்டியில் முதலாம் பரிசை யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியான சிவசுப்பிரமணியம் யமுனாராணி பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் தமது இடைநேரத்தில் சிறுவர்களுக்கு கல்வி கற்பித்தல் கதை புத்தகங்கள் பத்திரிகைகள் வாசித்தல் போன்ற விடயங்களில் ஈடுபட்டு வருகிறார்.

நாளை பொங்கல்தினம் இவரும் ஏனையோரும் பரிசுகளைப் பெறுகின்றனர்.

### மகேஸ்வரனின் பொப் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 13

சாவகச்சேரி லயன்ஸ் கழக ஆதரவில் டிறிபேர்க் கல்லூரியில் தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறவுள்ள 'இசைத் தென்றல்' நிகழ்ச்சியில் பிரபல பொப் இசைப் பாடகர் திரு. க. மகேஸ்வரனின் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெறும்.

தமிழ்நாட்டில் பிரபல பொப் இசைப் பாடகராக இவர் அறிமுகமாகியுள்ளார்.

இவரின் சிறப்பு நிகழ்ச்சியில் 'யாழ்ப்பாணத்து வாலிபர்களே' என்ற பாடலும் இடம் பெறுகின்றது. (இ-எ)

வை. டபிள்யூ. சி. ஏ:

## இலவச தையல் பயிற்சி நிலைய மாணவர்கள் நத்தார் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கோப்பாயிலும் யாழ்ப்பாணத்திலும் வை டபிள்யூ சி. ஏ. நடத்தும் இலவச தையல் பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த மாணவர் கடந்த 10ஆம் திகதி யாழ் சென் ஜோன்ஸ் பரிஷ் மண்டபத்தில் நத்தார் கொண்டாட்டத்தை நடத்தினர்

பிரதம அதிதியாக திருமதி அலிஸ் அரியரத்தினம் கலந்து கொண்டார்.

ஓய்வு நேரங்களில் பயனுள்ள தொழிலில் மாணவர்கள் ஈடுபடுவது மகிழ்ச்சியைத் தருகின்றது என்று திருமதி அரியரத்தினம் தனது உரையில் குறிப்பிட்டார்.

வை டபிள்யூ. சி. ஏ. சமூக சேவைப் பிரிவுத் தலைவர் திருமதி. ஜே. எம். சபாரத்தினம், வை டபிள்யு. சி ஏ. தலைவர் செல்வி எல். ஆர். நவரத்தினசிங்கம் ஆகியோரும் பேசினர்.

நத்தார் கரோல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

(இ-எ)

## கிராம வளர்ச்சிக்கு ஐக்கிய நாணய சங்கங்களும் முதுகெலும்பு

வேலணை, ஜன. 13

இன்றைய காலக் கட்டத்தில் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஐக்கிய நாணய சங்கங்களும் முதுகெலும்பாக விளங்கப் போகின்றன

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஐக்கிய நாணயச் சங்கங்களின் பிரதிநிதிகள் மத்தியில், வீடமைப்புக் கடன்கள் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். கே. முருகையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் முருகையா தொடர்ந்து உரையாற்றுகையில்,

1977ஆம் 1978ஆம் ஆண்டு பெரும்போக பயிர்ச் செய்கைக்கு தீவுப் பகுதியிலே பல லட்சம் ரூபாவை மக்கள் வங்கியில் இருந்து கடனாகப் பெற்றவர்கள் அக் கடன்களை திருப்பிச் செலுத்தவில்லை. இதனால் மக்கள் வங்கி மீண்டும் கடன்களை வழங்க

(4-ஆம் பக்கம் பார்க்க)

## இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு நடந்த பிரிவுபசாரம்

வல்வெட்டித்துறை, ஜன 13

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலிருந்து இடம் மாறிச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசாரம் அண்மையில் கரவெட்டி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது

கே. சுப்பிரமணிய ஐயர் (யாழ் கச்சேரி), திரு. எஸ். விநாயகமூர்த்தி (ஓய்வு), திருமதி பத்மாசனி இரத்தினகோபால் (வவுனியா கச்சேரி), கிராம சேவக அலுவலர் திரு. எ. மகாலிங்கம் (கரவெட்டி கிழக்கில் இருந்து அடம்பனுக்கு) ஆகியோருக்கே பிரியாவிடை வைபவம் நடந்தது.

வைபவத்தில் அவர்களின் சேவையினைப் பாராட்டி திரு. என். தம்பிப்பிள்ளை, திரு இரத்தினம், கிராம சேவை அலுவலர் திரு. சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர்.

திரு. எஸ் வேலாயுதபிள்ளை நன்றி கூறினார்.

(இ-160)

### கோரிக்கை

சென்னை, ஜன. 12

சகல தேசிய மொழிகளையும் அரச மொழியாக பிரகடனப்படுத்த வேண்டும் என்று தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

திருச்சியில் நடந்த நான்காவது ஆண்டு பொதுக்கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நூற்றுக்கு அதிகமான எழுத்தாளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். (இ-எ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## விஞ்ஞானம், கணிதம், ஆங்கில ஆசிரியர் பரீட்சை மாத இறுதியில்

மானிப்பாய், ஜன 13

விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களை தெரிந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் இம்மாதம் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

விஞ்ஞான, கணித பாட ஆசிரியர்களுக்கான பரீட்சை 25 ஆம் திகதியும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பரீட்சை 26 ஆம் திகதியும் நடைபெறும்.

பரீட்சை ஆணையாளர் திரு. ஸ்ரான்லி பெரேரா இதனை அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை சம்பந்தமான அனுமதிப்பத்திரங்கள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சுமார் நாலாயிரம் ஆசிரியர்கள் இப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைகளில் நியமனம் பெற உள்ளனர்

பரீட்சைக்கென முப்பத்தாறாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து சுமார் 1500க்கு அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன என்றும் பரீட்சைப்பகுதி அதிகாரி ஒருவர் கூறினார்.

(இ-90)

## விளையாட்டுத்துறையில் இன, மத பேதம் கிடையாது

### உடற்பயிற்சி கருத்தரங்கில் உரை

கரவெட்டி, ஜன. 13

விளையாட்டுத்துறையில் இன, மத பேதம் கிடையாது. எனவே விளையாட்டுத் துறையிலும் சரி மற்றும் விடயங்களிலும் சரி இன, மத பேதமின்றி நற்பண்புடன் செயற்பட வேண்டும்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்களுக்கான உடற்பயிற்சிக் கருத்தரங்கில் வவுனியா மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

வவுனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. பீ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. சபாநாயகம் மேலும் உரை நிகழ்த்துகையில்-

சகல பாடசாலைகளிலும் உடற்பயிற்சியை ஊக்குவிக்க வேண்டும், உடற்பயிற்சி கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறப்பாக செயற்பட வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் பூரணத்துவம் அடைவதற்கு உடற்பயிற்சியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

வவுனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. பீ. சோமசுந்தரமும் [illegible] கல்வி அதிகாரி திரு ரி. எம் ஏ. பொன்கலனும் கருத்தரங்கிற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தனர். (இ-70)

### உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன 13

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் பளை அரசினர் வைத்தியசாலைக்கு 5000 ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

(ஒ-5)

## ஒவ்வொரு உறுப்பினரிலும் வர்த்தகர் சங்கம் தங்கியுள்ளது

### புனரமைப்புக்கூட்டத்தில் உரை

கொடிகாமம், ஜன 13

''வர்த்தகர் சங்கம் தனியே தலைவரிலோ அல்லது நிர்வாகக் குழுவிலோ மட்டும் தங்கி இருக்கவில்லை. ஒவ்வொரு உறுப்பினரிலும் தங்கி இருக்கிறது.

கொடிகாமம் வர்த்தகர் சங்க புனரமைப்புக் கூட்டத்தில்பேசும்போது சங்க உபதலைவர் திரு. யோகலிங்கம்மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் திரு இ. சற்குணராசா தலைமையிற் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் திரு யோகலிங்கம் தொடர்ந்துபேசும் போது ஒற்றுமையைக் கட்டிக் காப்போமானால் எமது சங்கம் அநேக சாதனைகளைச் சாதிக்க முடியும். தொழிலாளர் உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இன்றேல் வர்த்தகர் [illegible] உதயமாகும் [illegible] வேண்டி வரும். இப்படி அவர் கூறினார்.

கொடிகாமத்தில் உள்ள தென்மராட்சி ப.நோ. கூ, சங்கத்தலைவர் திரு. அ திருநாவுக்கரசு பேசும் போது சோஷலிச அடிப்படையில் மனித ஜனநாயக உரிமைகளை நழுவவிடாது திட்டம் தீட்டிச் செயற்படவேண்டும் என்றார்.

இணக்கசபை செயலாளர் திரு. கு. சதாசிவமூர்த்தி இணக்கசபை உறுப்பினர் திரு. எம். கமலநாதன், தபாலக அதிபர் திரு. வி வி. திருச்செல்வம், இளைப்பாறிய அதிபர் திரு. சி செல்லத்துரை, வாகன சாரதிகள் சங்கத்தலைவர் திரு. செ. மாணிக்கம், டாக்டர் எஸ். ஏ. முகன் உட்பட பலர் உரையாற்றினர்.

(இ-75)

உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது
உன்னத பணி

யாழ். ஆஸ்பத்திரி
இரத்த வங்கி

உங்கள் சேவையை
எதிர்பார்த்து நிற்கிறது!

இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இன்று செய்யக்கூடியதை நாளைக்கு என்று பின் போடாதே.

— ஜெபர்சன்

உதயன்

இல,15, உஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 13-01-1987 த. பெ இல 23

# கிராமங்களே எழுமின்!

கிராமப்புற அபிவிருத்திக்கு இந்த வருடத்தில் முக்கியத்துவம் கொடுக்க யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை அதிகாரிகள் முடிவு செய்திருக்கிருர்கள். யாழ்ப்பாண அபிவிருத்திச் சபைக்கென அரசு வழங்கிய நிதியில் குறிப்பிடத்தக்க பணம் அதற்கென ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கிராம அபிவிருத்தியில் அக்கறை காட்ட அதிகாரிகள் முன்வந்திருப்பது நல்ல அறிகுறியாகும்.

அதுவும் இப்போதைய சூழ்நிலையில் கிராமப்புற வளர்ச்சிக்கே நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

எந்த ஒரு நாட்டிலும் நகரங்களைவிட, கிராமங்களே எண்ணிக்கையிலும் விஸ்தீரணத்திலும் கூடுதலாக உள்ளன. கிராமங்களாக இருந்த இடங்கள்தான் நகரங்களாக மாற்றப்பட்டன; அல்லது மாற்றப்படுகின்றன

கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு போன்றவை. நகரங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கையைவிட கிராமங்களில் வாழும்மக்கள் எண்ணிக்கையே அதிகம். கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாக வைத்தே ஒரு நாட்டின் முன்னேற்றம் கணிக்கப்படுகிறது

ஒரு நாட்டின் இயற்கைத்தன்மையும், பண்பாடு, கலாசாரமும் கிராமப்புற மக்கள் மூலமே மதிப்பிடப்படுகின்றன கிராமங்களின் தனித்துவமே ஒரு நாட்டின் சிறப்பான சொத்து. கிராம மக்களுக்குக் கிடைக்கும் சுதந்திரமே ஒரு நாட்டின் சுதந்திரமாகும்.

சுதந்திரப் போராட்டக் காலத்திலும், அதற்குப்பின்னரும் மகாத்மா காந்தியடிகள் கிராம ராஜ்யத்தை வலியுறுத்தி வந்தார். கிராமப் பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் உணர்த்திவந்தார்.

ஈழம் வாழ் தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் கிராம அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர்.

வெளிநாடுளில் இருந்து வரும் அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்கள் முற்றாகத் தடைப்படும் காலம் வரலாம் போக்குவரத்தும் துண்டிக்கப்படலாம்.

அத்தகைய வேளைகளில் மக்கள் தத்தமது கிராமங்களிலேயே தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலைமை உருவாக்கப்பட்டிருப்பது அவசியம்

கிராமங்களில் சந்தைகள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், நீதிமன்றங்கள், வங்கிகள், விவசாய விஸ்தரிப்பு அலுவலகங்கள் என்பன மட்டும் அமைத்து விட்டாற் போதாது. அவை மக்களுக்கு உரிய சேவைகளை வழங்கக் கூடியனவாக இருப்பதும் பிரதானம்

கிராம அபிவிருத்தி என்பது முழுக்க முழுக்க கிராமப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

கிராமங்களின் மூலவளங்களைத் தக்கபடி கண்டறிந்து, மக்கள் தேவையைப் பூர்த்தி செய்ய அவற்றைப் பயன்படுத்துவதிலேயே கிராமப் பொருளாதார வளர்ச்சி தங்கி இருக்கிறது.

கிராமப் பொருளாதாரம் அந்தந்தக் கிராம விவசாய உற்பத்தியிலும், கைத்தொழில் குறிப்பாகச் சிறு கைத்தொழில் வளர்ச்சியிலுமே தங்கி உள்ளது.

கிராம அபிவிருத்தி என்பது, கிராமங்களை நகரங்களாக்குவதாகவோ அல்லது நவீன மயப்படுத்துவதாகவோ இருக்கக் கூடாது. அது கிராமப் பொருளாதார எழுச்சியை இலக்காகக் கொண்டதாக அமைய வேண்டும்.

கிராம அபிவிருத்தியை, எழுச்சியை தோற்றுவிப்பதற்கு அதிகாரிகளால் மட்டும் முடியாது. மக்கள் அதனை மனதார உணர்ந்து உழைக்க வேண்டும்.

கிராமங்களே— கிராம மக்களே எழுமின், விழிமின், செயல்மின்!

# கத்தோலிக்க சமயபாட ஆசிரியர் எதிர்நோக்கும் கஷ்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ் பாடசாலைகளில் கற்பிக்கும் கத்தோலிக்க சமய பாட ஆசிரியர்கள் பெரும் கஷ்ட நிலையை எதிர் நோக்க வேண்டி உள்ளது:

யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்க தலைவர் திரு. எஸ். அகஸ்ரின் இவ்வாறு தெரிவித்தார்.

கத்தோலிக்க சமய பாடப் பயிற்சி நெறியில் பயின்று வெளியேறிய சமய விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தமக்குரிய சம்பள உயர்வை பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

அவர்களுக்கு கல்வித் திணைக்களம் கத்தோலிக்க சமய பாடத்திற்கான சேவைக் காலப் பயிற்சி அளிக்காமையே இதற்கு தடையாகும்.

1981, 82, 83 ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சியையும் பாடசாலைப் பயிற்சியையும் முடித்துப் பரீட்சைக்குத் தோற்றி வெளியேறிய 13 சமய பாடப் பயிற்சி நெறியாளர்களின் பரீட்சை முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை.

இதனால் இவர்கள் தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களுக்கான சம்பளத்தையே பெறுகின்றனர். இவர்களுக்குப் பின்னர் வெளியேறியோர் பரீட்சை முடிவுகளைப் பெற்று உரிய சம்பளத்தையும் பெறுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-5)

ஈரான் — ஈராக்

# போர் முனையில் சதாம் ஹுசேன்

## இராணுவத் தளபதிகளுடன் நீண்டநேரம் ஆலோசனை

பாக்தாத், ஜன. 12

ஈரான்—ஈராக் யுத்தம் தீவிரமடைந்துவரும் தருணத்தில் நேற்று போர் முனைக்கு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

தனது இராணுவத் தளபதிகளுடன் ஜனாதிபதி நீண்ட நேரம் பேச்சுக்களை நடத்தினார்.

ஈரானின் குடியிருப்புப் பகுதிகளை ஈராக் பலமாக தாக்கத் தொடங்கி உள்ளது.

இதனிடையில் ஈராக்குக்கான தனது இராணுவ உதவியைத் தொடர்ந்து வழங்கப் போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது

போர் நிறுத்தம் செய்து அமைதிப் பேச்சுக்களை நடத்த ஈரான் சம்மதிக்கும்வரை இராணுவ உதவி ஈராக்குக்கு வழங்கப்படும் என்று ரஷ்யாவின் ஐ நா தூதர் அலெக்ஸாண்டர் பெலனெகொவ் ஐ நா. பொதுச் செயலாளரிடம் தெரிவித்தார். (இ எ)

## அமெரிக்கா கண்டனம்

வாஷிங்டன், ஜன 12

'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையின் செய்தியாளரை வெளியேற்றுவது என்று தென்ஆபிரிக்க அரசு முடிவு எடுத்ததை அமெரிக்க அரசு கண்டித்துள்ளது

புத்திசாலித்தனமற்ற இந்த முடிவை மீண்டும் புனராலோசனை செய்யும்படி அமெரிக்கா தென்ஆபிரிக்க அரசைக் கேட்டுள்ளது (நி-எ)

**வெளி உலகில்**

## சமாதான உலகை விரும்பும் ரஷ்யா

மாஸ்கோ, ஜன 12

ஆயுதப் போட்டியை நிறுத்தவும் அணுஆயுத மற்ற சமாதான உலகை உருவாக்கவும் பயன் தரும் நடவடிக்கைகளை அமுல்படுத்த ரஷ்யா தயாராக உள்ளது

இவ்வாறு ஐ நா. தலைமைச் செயலர் பெரஸ்டி கியூலருக்கு ரஷ்யா உறுதியளித்துள்ளது

உலக சமாதானத்துக்காக ஒத்துழைக்கும் சகல நாடுகளுடனும் கூட்டுச் சேர்வதற்கும் ரஷ்யா ஆயத்தமாக உள்ளது எனவும் அந்த உறுதி மொழியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

கம்பூச்சியா பிரச்சினை:

## சமாதானப் பேச்சு மூலம் தீர்க்கக் கோரிக்கை

நொம்பெங், ஜன 12

கம்பூச்சியா பிரச்சினையை சமாதானப் பேச்சுக்கள் மூலமே தீர்க்க வேண்டும்.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. என். டி திவாரி தெரிவித்தார்.

வியட்நாமில் நடந்த விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் திரு. திவாரி இதனைத் தெரிவித்தார்

(இ-எ)

# குளிருக்கு 60 பேர் பலி!

## ரஷ்யாவே மோசமாகப் பாதிப்பு கிறீஸில் அவசரகாலம் பிரகடனம்

மாஸ்கோ, ஜன. 12

ரஷ்யாவையும் மற்றும் ஐரோப்பிய நாடுகளையும் மோசமாகத் தாக்கி வரும் குளிர்காற்றினால் இதுவரை 60க்கு மேலானோர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவில் மட்டும் ஐம்பது பேர் உயிரிழந்தனர்.

கடந்த 50 ஆண்டு காலத்திலும் இது போன்ற மிகப் பயங்கரக்குளிர் காலநிலை நிலவியது இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறீஸில் குளிர்காற்றுத் தாக்கத்தைச் சமாளிக்க அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. சுமார் 200 கிராமங்கள் குளிரால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

செக்கோஸ்லவேகியாவில் நெடுந்தூரப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ருமேனியா, சுவீடன் நாடுகளில் அதிக அளவு மின்சாரம் பாவிக்கப்படுவதினால் மின் தடை ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் மின்பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கங்கள் மேற்கொண்டுள்ளன. (இ-எ)

# பஞ்சாப் அரசை பதவி நீக்கம் செய்க

## பாரதிய ஜனதா கோரிக்கை

புதுடில்லி, ஜன. 12

பஞ்சாப் மாநிலத்தில் பர்னாலா அரசாங்கத்தைப் பதவிநீக்கம் செய்து ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வந்து தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள் இந்திய அரசாங்கத்தை இவ்வாறு கோரியுள்ளனர்.

கட்சித் தலைவர் திரு எல்.கே. அத்வானி ஜாமதாபாத்தில் பேசுகையில் ''எல்லைக்கு அப்பால் இருந்து வரும் ஊடுருவல்காரர்கள் விஷயமாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எல்லையில் பந்தோபஸ்து வலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்''— என்று சொன்னார்.

கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. அடல் வாஜ்பாயி ஜம்முவில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில்,

'தீவிரவாதிகளைத் தனிமைப்படுத்தி பிரச்சினைக்கு தீர்வுகாண அரசியல் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்'— என்றார்.

கட்சிச் செயலாளர் திரு.கே.எல்.சர்மா சண்டிகார் நகரில் பேசுகையில், ''தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதில் பர்னாலா அரசு தவறிவிட்டது''— என்றார்.

மூன்று தலைவர்களும் பர்னாலா அரசைப் பதவி நீக்கம் செய்து ஜனாதிபதி ஆட்சியை பஞ்சாப்பில் கொண்டு வருதல் வேண்டும் என ஏகமனதாக மத்திய அரசை வற்புறுத்தினர் (இ-எ)

**செய்திக்கொத்து**

### இலவச வைத்திய சிகிச்சை நிறுத்தம்

மானிப்பாய் ஜன. 13

சண்டிலிப்பாய் பகல் பராமரிப்பு நிலையத்தில் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் அளிக்கப்பட்டு வந்த இலவச வைத்திய சிகிச்சை, தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இச்சேவையில் ஈடுபட்டு வந்த டாக்டர் வெளிநாடு சென்றுள்ளார்.

மானிப்பாய் கிறீன் மெமோரியல் வைத்திய சாலை வைத்தியர்கள் சிலர் சண்டிலிப்பாயிலும் உடுவிலிலும் உள்ள கிறிஸ்தவ சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ளவர்களுக்கு பல மாதங்களாக இலவச மருத்துவ சிகிச்சைகளை அளித்து வந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

(இ-90)

### சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க சேருட்டரி கிராமக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் புதிய மீன்சந்தை ஒன்றை அமைத்தனர்.

அத்தோடு வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த விதியையும் விரிவுபடுத்தினர். (இ)

### புலிகளின் பாதுகாப்பு அரண்களைப் பார்வையிட்டார்

வல்வெட்டித்துறை, ஜன. 13

புலிகளின் பிரமுகர் கண்ணன் எல்லையில் புலிகளின் பாதுகாப்பு அரண்களைப் பார்வையிட்டார்.

இவருடன் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசையும் வந்திருந்தார்.

இப் புலிகளின் பாதுகாப்பு அரண்களின் நிலை பற்றி கண்ணன் திருப்தி தெரிவித்தார்.

(இ-160)

### கல்வி வளர்ச்சி கழகம்

வல்வெட்டித்துறை ஜன. 13

பருத்தித்துறையில் உள்ள துன்னாலைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் திரு. வ. தங்கராசா தலைமையில் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதம விருந்தினராக நெல்லியடிப் பிரதேச பொறுப்பாளர் சுக்லாக் கலந்து கொண்டார்.

(இ-160)

### இறுதிச் சடங்கு

கரவெட்டி, ஜன. 13

கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை [illegible] ம் — தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த பாபு என அழைக்கப்படும் பாலகிருஷ்ணராஜாவின் ஈமக்கிரியைகள் அவரின் வீட்டில் இடம்பெற்றன

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் சேலப்பு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது

(இ-70)

### வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன 13

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள சதன் தலைமைச் செயலகத்தில் இலங்கைக் கிளையின் தலைவர் திரு. பொன். பூலோகசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் துணைச் செயலர் திரு ஆ. சண்முகலிங்கம் தலைமையகத்தின் பொறுப்புக்கள் சார்பாக விசேட பிரதிநிதியாக கலந்துகொண்டு உரையாற்றவிருக்கின்றார்.

மேலும் இக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும். (இ)

**சமய சந்நிதிகளில்**

### சுருவிலில் மகர விளக்கு

ஊர்காவற்றுறை ஜன 13

சுருவில் ஹரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மார்கழி மகர விளக்கு விழா இடம்பெறும்.

இதையொட்டி விசேட சமயச் சொற்பொழிவுகள், பூஜை அபிஷேகங்கள் ஆகியன இடம்பெறும்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்படி ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ யோகானந்தக் குருக்கள் மேற்கொண்டு வருகின்றார். (ஒ-16)

### திருவாசக முற்றோதல்

கொடிகாமம், ஜன 13

சாவகச்சேரி கூட்டுப் பிரார்த்தனை சபையாரால் சாவகச்சேரி கச்சாய் வீதியில் எழுந்தருளியுள்ள வீரபத்திரர் சுவாமி கோயிலில் திருவாசக முற்றோதல் கூட்டுப் பிரார்த்தனைச் சபைத் தலைவர் புலவர் திரு. அ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. (இ-75)

புதிய உபமின் நிலையத்தால்

## கட்டுடைக் கிராமம் மின் ஒளி பெற்றது

மானிப்பாய், ஜன. 13

கட்டுடைக் கிராமத்தின் அண்மையில் அமைக்கப்பட்ட புதிய உப மின் நிலையத்தால் கட்டுடைக் கிராமம் மின்ஒளி பெற்று விளங்குகிறது.


யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச் சபையின் மானிப்பாய் பட்டின உபநிலைய ஆதரவில் இந்த புதிய உபமின் நிலையம் அண்மையில் கட்டுடைக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தை மானிப்பாய் பட்டினசபை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட [illegible] தர் திரு க. இராசசந்திரம் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

சுமார் நான்கு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இப்புதிய நிலையம் மக்களின் பலநாள் ஆசையை நிறைவேற்றியுள்ளது.

கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கம், கட்டுடை மின்சார அபிவிருத்தி ஆலோசனைசபை கட்டுடை சனசமூக நிலையம் ஆகிய பொதுஸ்தாபன உறுப்பினர்களுடன் பொதுமக்கள் பலரும் இத்திறப்பு விழாவில் பங்கு கொண்டனர்

(இ-90)



**பொய்யாமொழி**

குறள்

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

பொருள்

பிறவித் துன்பத்திற்குக் காரணமான அறியாமை நீங்குமாறு, முத்தி என்னும் சிறந்த நிலைக்குக் காரணமான செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு.

சிலர் இழிவாகக் கருதுகிறார்கள்

# சீவல் தொழிலாளி என்ற பெயர் மாற்றப்படும்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 13

சீவல் தொழில் செய்வதை இழிவாகச் சிலர் கருதுகின்றனர். இந்த நிலையை முற்றாக மாற்றி அமைக்க வேண்டும். இத்தகைய நிலையைப் போக்கும் முகமாக சீவல் தொழிலாளர் என்ற பெயரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

வேலணை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் பன்னிரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா மேற்கண்டவாறு கூறினார்.

இப்பொதுக் கூட்டம் வேலணை துறையூர் ஐயனார் வித்தியாசாலையில் சங்கத் தலைவர் திரு. செல்லையா அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது!

பனம் சாராயமே சிறந்த சாராயம் என்பது எப்போதோ நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இதனாலேயே பனம் சாராயத்தை வெளிநாட்டவரும் விரும்பும் நிலை உருவாகியுள்ளது.

இக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிய பனம் சாராய வடிசாலை பூரணமாக இயங்குமாயின் பல லட்சம் ரூபா வருமானத்தைத் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களும், சீவல் தொழிலாளர்களும் பெறக்கூடியதாக இருக்கும்.

இப்படி அவர் கூறினார்.

கூட்டத்தில் உதவிக் கூட்டுறவு ஆணையாளர் (பனம்பொருள்) திரு. எஸ். வேலாயுதபிள்ளை, திரு. மு. ஆறுமுகம், யாழ் மாவட்ட தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க சமாசப் பொது முகாமையாளர் திரு. என். இராசேந்திரம் உட்பட பலரும் பேசினர். (இ)

# கற்ற பாடசாலைக்கு உதவுவது பழைய மாணவர் கடமை

பண்டத்தரிப்பு ஜன. 13

தாம் கற்ற பாடசாலையை நேசிப்பதும் அதன் தேவைகளை அறிந்து உதவுவதும் பழைய மாணவர் கடமை.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு வே நாகராசா மேற்கண்டவாறு கூறினார்.

பழைய மாணவர் மத்தியில் அவர் உரையாற்றினார்,

திரு மு சரவணமுத்து உரையாற்றுகையில், இன்று அரசாங்கம் வடபகுதிப் பாடசாலைகளை மட்டுமல்ல, மக்களையும் புறக்கணிக்கிறது என்றார்.

திரு க. இராசரத்தினம் உரையாற்றுகையில் மெதடிஸ்த மிஷனரிமார் பாடசாலையை ஆரம்பித்து, பின் மூடுகின்ற நிலை ஏற்பட்டவேளையில் இவ்வூர் பெரியவர்களான சிலர் தியாக சிந்தையுடன் சைவப்பாடசாலை நிறுவி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் கையளித்த வரலாற்றைக் கூறினர்.

திரு. சபா நாராயணனும் உரையாற்றினர்.

பொன், கனகரத்தினத்தின் தேவாரத்துடன் ஆரம்பமான கூட்டம் புதிய செயலாளர் திரு. வே. சண்முகலிங்கத்தின் நன்றி நவிலுடன் நிறைவெய்தியது (இ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கு
ஸ்ருடியோ
★ நித்ய சித்ரா ★
சங்கானை.

# உதயன்

13 01 1987 செவ்வாய்க்கிழமை

வீடியோ — கறுப்பு / வெள்ளை—
வர்ணப் படப்பிடிப்புக்கும்
பிறேம் செய்தலுக்கும்
கலர் படங்கள் கழுவுதற்கும்
ஸ்ருடியோ நித்ய சித்ரா,
சங்கானை.

## சுவிஸின் முடிவுக்கு பலத்த எதிர்ப்பு

பேர்ன், ஜன. 12 சுமார் 40 தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது என்று சுவிஸ் அரசு செய்த முடிவை மனித உரிமைகள் ஸ்தாபனம், சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியன எதிர்த்து உள்ளன,

முடிவை மீண்டும் பரிசீலனை செய்யும்படி சுவிட்சர்லாந்து அரசாங்கத்தை இவை கோரி உள்ளன.

சுவிஸ் தலைநகரான பேர்னில் உள்ள இரண்டு இடதுசாரி எதிர்க்கட்சிகள் உட்பட பல ஸ்தாபனங்களும் அரசின் முடிவை எதிர்த்துள்ளன.

சுமார் 40 இலங்கைத் தமிழர்களை தென் இலங்கையில் உள்ள தங்கள் உறவினர்களுடன் வாழ திருப்பி அனுப்புவது என்று சுவிஸ் அரசு தீர்மானித்து உள்ளது. (உ-எ)

சிசுக்கொலை:

## சந்தேகநபருக்கு தண்டனையாக அபராதம்

### கசையடி வாபஸ்

யாழ்ப்பாணம், ஜன. 13 பதினைந்து நாள் சிசு ஒன்றைக் கொலை செய்து குளத்தில் வீசியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவருக்கு தமிழீழ இராணுவத்தின் மக்கள் மன்றம் அபராதத் தண்டனை வழங்கியது.

காலஞ்சென்ற தனது சகோதரரின் மனைவியுடன் தவறான தொடர்புகளை வைத்திருந்ததாகக் கூறப்படும் அந்தச் சந்தேக நபர் அத் தொடர்பினால் பிறந்த குழந்தையைக் கொலை செய்து குழந்தையின் சடலத்தை கல்லுடன் கட்டி குளத்தில் வீசியதாகக் கூறப்படுகிறது.

கடந்த கிறிஸ்மஸ் தினத்தன்று பிறந்த இந்தக் குழந்தையை மேற்படி நபர் கடந்த 4 ஆம் திகதி கொலை செய்தாராம்.

புத்தூர் மக்கள் மன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் இந் நபர் குற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து அவருக்கு பொது இடத்தில் வைத்து 25 கசையடி வழங்க வேண்டும் என்றும் —

ரூபா 2,500 அபராதத் தண்டனை விதிக்கவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது

எனினும் அப் பகுதி பொதுமக்களினால் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் எழுத்துமூல வேண்டுகோளை அடுத்து கசையடித் தண்டனை வாபஸ் பெறப்பட்டது. (உ)

இலங்கைப் படைகளினால் கைது செய்யப்பட்டபின்

## காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

### மன்னிப்புச் சபை கவலை தெரிவிப்பு

லண்டன், ஜன, 12 இலங்கையில் அரசுப் படைகளினால் கைது செய்யப்பட்டவர்களில் காணாமற் போய்விட்டவர்கள் என்று அறிவிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

—இப்படி சர்வதேச மன்னிப்புச்சபை மீண்டும் தெரிவித்துள்ளது

சபையின் ஜனவரி மாத செய்திக் குறிப்பில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பரில் காணாமற் போனவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்களில் இரண்டு பேர் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று வேறு சில வட்டாரங்கள் மூலம் சர்வதேச மன்னிப்புச் சபைக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

காணாமற் போனவர்கள் பற்றிய மன்னிப்புச் சபையின் அறிக்கை குறித்து இலங்கை அரசு இன்றுவரை விளக்கம் தரவில்லை. அவர்கள் எங்கு உள்ளார்கள் என்பது பற்றியும் அரசு கூறவில்லை.

இதேவேளை நாற்பது தமிழ் இளைஞர்களை படையினர் சுட்டு இரகசியமாகப் புதைத்ததாக கூறப்பட்ட மன்னிப்புச் சபையின் அறிக்கை ஒன்றை முற்றும் தவறானது என்று பி பி சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் அமைச்சர் அத்துலத் முதலி மறுத்து இருந்தார்.

அப்படி புதைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்ததாகவும் சடலங்கள் எதையும் காணவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்து இருந்தார்

இது, போல் நல்லநாயகம் வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதி ஏற்றுக்கொண்ட சாட்சியத்துக்கே முரணாக உள்ளது,

மேல் நீதிமன்ற நீதிபதியின் குறிப்பையே புறக்கணிப்பதாக அரசாங்கத்தின் கூற்று அமைந்துள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபை கவலை தெரிவிக்கின்றது

—இப்படி சர்வதேச மன்னிப்புச் சபையின் செய்திக் குறிப்பில் வலியுறுத்தப்பட்டு உள்ளது. (உ-எ)

## சுவீடன் அறிவிப்பு

ஸ்டொக்ஹோம், ஜன 13 மனித உரிமை மீறல்களை அனுமதிக்கும் நாடுகளுக்கு சுவீடன் உதவாது.

சுவீடன் அரசு தனது வரவு செலவுத் திட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சுவீடன் உதவும் 17 நாடுகளில் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை ஆகியவை உள்ளன. (உ-ஐ-எ)

## ஊழியர் திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம் ஜன 13 யாழ் தொலைத் தொடர்பு திணைக்களத்துக்குக் கடமைக்குச் சென்ற ஊழியர்கள் சிலர் அங்கு காவலுக்குநின்ற போராளிகளினால் திருப்பி அனுப்பப்பட்டனர். (இ-10)

## அராலிக் கடலில் வள்ளம் கவிழ்ந்தது

### பிரயாணிகள் தப்பினர்

ஊர்காவற்றுறை, ஜன 13 அராலிக் கடலில் பிரயாணிகளின் வள்ளமொன்று நேற்றுக் கடலில் மூழ்கியது.

ஆழங்குறைந்த கடற் பகுதியில் இவ்வள்ளம் மூழ்கியதால் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது,

நேற்றுப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு வள்ளமொன்று வேலணைக் கரையிலிருந்து அராலிக் கரையை நோக்கி பிரயாணத்தை ஆரம்பித்தது.

அதில் சுமார் 60 பேர் வரை இருந்தனர். அவர்களில் அதிகமானோர் பெண்கள்.

கரையிலிருந்து சுமார் இருநூறு யார் தூரத்தில் சென்றுகொண்டிருந்தபோது வள்ளத்தில் ஆட்டங்காணப்பட்டது.

இதனால் பிரயாணிகள் கலவரப்பட்டு ஒரு பக்கமாகச் சரிந்தனர்.

பின்னர் உடனடியாக வள்ளம் நீரில் மூழ்க ஆரம்பித்தது. ஆழங்குறைந்த பகுதியாக இருந்ததனால் அனைவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்,

உடனடியாக சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற ஏனைய வள்ளங்கள் நீரில் மூழ்கிய பிரயாணிகளைக் கரைசேர்த்தன.

இதற்கிடையில் 40,000/- பணத்தோடு சென்ற ஒருவரது பணம் தவறி விழுந்தது.

கரை சேர்ந்த அவர் தனது பணம் காணாமற் போனது குறித்து அங்குள்ள இளைஞர்களிடம் தெரிவித்தார்.

உடனடியாக செயலில் இறங்கிய இளைஞர்கள் கரையில் நின்ற வள்ளங்கள், வாகனங்கள் அனைத்திலும் தேடுதல் நடத்தினர்.

பின்பு அந்தப் பணம் கண்டுபிடிக்கப் பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது (இ-16-167)

### சட்ட...

சாரத்தை உபயோகிக்கிறார்கள்.

மின்சார விளக்கு வசதியில்லாத வீடுகளில் வசிப்போர் மண்ணெண்ணெய் பற்றாக்குறையினால் இரவில் விளக்கு எரிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. இவர்களும் குறுக்கு வழியில் மின்சாரத்தைப் பாவிக்க முயற்சிக்கின்றனர்.

இதேவேளை குடாநாட்டில் பாதுகாப்பற்ற மின் கம்பிகளில் சட்டவிரோத மின்சாரம் பெறப்படுவதன் காரணமாக பல உயிர்கள் அடிக்கடி பலியாகி வருகின்றன. (உ10)

## இலங்கைக்கு ஆயுதம் வழங்கும் நாடுகளின் பட்டியல்

கொழும்பு, ஜன. 12 பாகிஸ்தான், சீனா, எகிப்து, இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கை ஆயுதங்களை வாங்குகிறது.

பணம் கொடுத்தே ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன. உதவித் திட்டத்தின்கீழ் இவை வாங்கப்படுவது இல்லை

—இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில வார இதழில் அமைச்சரின் பேட்டி பிரசுரமாகி இருந்தது.

சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து ஆயுதங்கள் தனிப்பட்ட கம்பெனிகளில் இருந்து வாங்கப்படுவது இல்லை.

ரோந்துப் படகுகள் இஸ்ரவேலிடமிருந்து வாங்கப்படுகின்றன.

--இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அப்பேட்டியில் தெரிவித்தார். (உ-எ)

## இன்று நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன 13 தீவுப்பகுதி கிராமிய சுகாதாரச் சேவையாளருக்கான நேர்முகப் பரீட்சை இன்று செவ்வாய் காலை 9 மணியளவில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் யாழ் சுகாதாரப் பணிப்பாளரினால் நடத்தப்படும்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியினால் தீவுப்பகுதி விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-எ)

### யாழ்ப்..,

(-2ம் பக்கத்தொடர்ச்சி)

மறுத்துள்ளது என்றார்.

வேலணைவிசேடசேவை உத்தியோகத்தர் திரு கா. கணேசலிங்கம் தமது உரையில், இலங்கையிலே 10 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த கடன்கள் யாவும் இதுவரை காலமும் விசேட சேவை உத்தியோகத்தர் மூலமாகவே வழங்கப்பட்டு வந்தன ஆனால் 1687ஆம் ஆண்டிலிருந்து இக் கடன்கள் நாடு பூராகவும் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாக வழங்கப்பட இருக்கின்றன என்றார். (இ-167)

முன்னாள் கல்வி அமைச்சர் பதியுதீன் கூறுகிறார்:

## முஸ்லிம் மாகாணசபை: அதுவே எமக்குத் தேவை

### மிகுதியை அவர்கள் எதுவும் செய்யட்டும்

கொழும்பு, ஜன 13 எங்களுக்கு முஸ்லிம் மாகாணசபை ஒன்று கிடைத்தால்போதும். விரும்பியபடி மற்றப் பகுதிகளை எதுவும் அவர்கள் செய்துகொள்ளட்டும்.

— இப்படி முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்முத் தெரிவித்தார்

வடக்கு – கிழக்குஇணைப்பை வன்மையாக எதிர்க்கிறீர்களா? என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் செய்தியாளர் கேட்டபோதே முன்னாள் அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்.

டாக்டர் மஹ்மூத் மேலும்சொன்னதாவது;

முஸ்லிம்கள் மோசமாகப் புறக்கணிக்கப்பட்டனர்.

குறைகள் உள்ள ஓர் இனம் இருக்கும் என்றால் அது முஸ்லிம் இனம் தான். கல்லோயாத்திட்டத்துக்குப் பின்னர் எல்லாக் குடியேற்றங்களும் முஸ்லிம்களின் நலன்களுக்கு எதிராகவே இடம் பெற்றன.

கல்லோயாத் திட்டத்தில் உள்ள காணிகளில் 50வீதம் முஸ்லிம்களுக்கு இடம் அளிக்கப்படும் என்று திரு. டி. எஸ் சேனநாயக்கா சொன்னார்

அது காப்பாற்றப்படவில்லை.

அதனால் 1956இல் இருந்து 1960 வரை முஸ்லிம் வாக்காளரின் எண்ணிக்கை 44,000 இல் இருந்து 56,000ஆக அதிகரித்தது. ஆனால் சிங்களவரின் எண்ணிக்கையே 3,905இல் இருந்து 23,000 வரை அதிகரித்தது

கிழக்கு மாகாணத்தில் உள்ள33 வீதமான காணிகள் முஸ்லிம்களுக்கும் 43 வீதமான காணிகள் தமிழருக்கும் 24 வீதமான காணிகள் சிங்களவருக்கும் வழங்கப்படவேண்டும்

1981 சனக் கணக்கெடுப்பை வைத்து இதை நாம் கூறுகிறோம். முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 1948 சனக் கணக்கெடுப்பை வலியுறுத்துகின்றது. தமிழர்கள் 1921 சனக் கணக்கெடுப்பை வலியுறுத்துகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறைத் தொகுதியைத் தவிர்ப்பது ஆபத்தானது சிங்களவருடன் வாழவே நாம் விரும்புகின்றோம். அப்படி சிங்களப்பகுதி நீக்கப்பட்டால் முஸ்லிம் மாகாண சபை அத்தியாவசியமானதாகத் தேவைப்படும்.

வடக்கு-கிழக்கு இணைக்கப்படும் என்ற நிலை வந்தால் முஸ்லிம்களுக்குத் தனி மாகாணசபை கொடுக்கப்பட வேண்டும்.

இப்படி டாக்டர் பதியுதீன் மஹ்மூத் பேட்டியில் தெரிவித்தார். (உ-எ)

## கடற் காகத்துக்கு ஏற்பட்டுள்ள மவுசு

யாழ்ப்பாணம், ஜன 13 எரிபொருள்தடை கடற் காகத்துக்கும் கிராக்கியை ஏற்படுத்தி இருக்கிறது.

குதிரைவிலையில் மீன் விற்கப்படும் இந் நாட்களில் கடற்காகம் ஒன்று ஐந்து ரூபா முதல் 10 ரூபாவரை விற்பனையாகிறது

வழமையாக பத்து ரூபா கொடுக்கும் மீன் இப்பொழுது 25 ரூபாவரை விலை உயர்ந்துள்ளது. அதனால் கடற்காகத்தைப் போட்டி போட்டு வாங்குவதை கடற்கரையில் காணக்கூடியதாக இருக்கிறது.

மீனுக்கு விரிக்கும் வலைக்குள் நுழையும் போது கடற்காகம் சிக்கிக்கொள்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மிஸோரம் தேர்தல்

புதுடில்லி, ஜன. 13 மிஸோரம் மாநிலத்தின் சட்டசபைத் தேர்தல்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதி நடைபெறும்

தேர்தல் ஆணையாளர் இதற்கான அறிவித்தலை நேற்று புதுடில்லியில் வெளியிட்டார். (இ-எ)

### ஆயிரம்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

மூன்று டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் மாதாந்தம் சம்பளம் உட்பட வழங்கப்படும் மொத்தக் கொடுப்பனவு ஐந்து லட்ச ரூபாவுக்கு மேல் என வட பிராந்திய போக்குவரத்துச் சபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வருமானம் இல்லாமல் [illegible] யாளர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்படும் என்று அவர் தெரிவித்தார். (உ-10)

### மறியற்போர்...

(1.ம் பக்கத் தொடர்ச்சி)

வரை எந்த விதமான திருப்திகரமான பதிலும் கிடைக்காமலிருப்பதால் தொடர்ந்து போராட்டம் நடைபெறும்.

அடகு வைத்த சகலரும் தங்கள் கிளைகள் முன்பு கூடி போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும்.

அங்கத்தவர்களாக இதுவரை பதிவு செய்யாத அடகு வைத்த வாடிக்கையாளர்கள் யாவரும் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### எரிபொருள்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விநியோகிப்பது ஆகிய விடயங்கள் குறித்து நீண்ட நேரம் ஆராயப் [illegible] இறது [illegible] முடிவுகள் எதுவும் வெளியிடப்படவில்லை. (உ)

## விடுதலை

கொழும்பு, ஜன 13 பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சுமார் ஒன்றரை வருடகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெல்லாவெளி பொலிஸ் நிலைய சார்ஜன்ட் சிங்கராயர் பிரான்ஸிஸ் விடுதலை செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக குற்றம் சுமத்த போதிய ஆதாரம் ஏதும் இல்லை என சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்ததையடுத்தே இவர் விடுவிக்கப்பட்டார். (உ)

### பிரதான..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விடுத்திருந்தன.

இதைப் பன்றிச் சொந்தக்காரர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

பன்றிகளின் 'பவனி'யை மாநகரசபை நிர்வாகம் கட்டுப்படுத்தாதா? என மக்கள்கேட்கிறார்கள் (உ-10)

## பொங்கல் விழாக்கள்

சுன்னாகம் ஜன 13 சுன்னாகம் மேற்கு ஐயனார் சனசமூக முன்னேற்றக் கழகத்தின் பொங்கல் விழா நாளை புதன்கிழமை மாலை6.00 மணிக்கு நிலையத் தலைவர் திரு. மு. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது

வலி – தெற்கு உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கௌரவ விருந்தினராக கலந்து கொள்கிறார்.

அதிபர் மு. நாகேந்திரம், சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. சி குமாரவேல், விளையாட்டு அதிகாரி திருமதி. வி. வெங்கேஸ்வரன், வைத்திய கலாநிதி ஆர். நடராஜா 'நாகம்ஸ்' இராசரத்தினம், அம்பேத்கார் சனசமூக நிலைய தலைவர் சபா புஷ்பநாதன், திரு. க. செல்வநாதன், திரு. சோ. சொசேல் உட்பட பலர் உரையாற்றுவர். (இ-27)

### மல்லாகத்தில்

சுன்னாகம் ஜன, 13 மல்லாகம் கலைமகள் சனசமூக நிலையத்தில் நாளை புதன்கிழமை நண்பகல் பொங்கல் விழா சிறப்பாக நடைபெறுகிறது

சிவயோகபதி சிறுவர் பாடசாலை பாலர்களுக்கும் - கலைமகள் பாலர் பாடசாலை பாலர்களுக்கும் அரிச்சுவடி புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்படும் (இ-27)

* * *

### இருபாலையில்

இருபாலைகிழக்கு விதானையார் வீதியில் உள்ள அன்னை இந்திரா சனசமூக நிலையத்திலும் நாளை காலை பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நாளை மாலை ஆறு மணி அளவில் நடைபெறவுள்ளது. (உ-10)

## ஊறணி முகாம் தொடர்பாக லலித்தை இராசு சந்தித்தார்

கொழும்பு,ஜன 13 மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஊறணி ஆயுதப்படையின் அக்கிரமச் செயல்கள் பற்றி அமைச்சர் செ. இராசதுரை தேசியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியைச் சந்தித்து எடுத்துரைத்தார்.

அந்த முகாமை அகற்றும்படியும், அமைச்சர் இராசதுரை அமைச்சர் அத்துலத் முதலியைக் கேட்டுக்கொண்டார்.

ஊறணி முகாம் திறக்கப்பட்டு ஒரு மாதமாகிறது.

அதன் பின்னர் அப்பகுதி இளம் பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகின்றனர்.

இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

இப்படி மட்டக்களப்புப் பிரஜைகள் குழு முறையிட்டிருக்கிறது. (இ.எ-1)

### தொலைத்..,

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கத்துக்குச் செல்வதற்கு அஞ்சுவதாலும்.–

தென்னிலங்கை ஊழியரை இங்கு வருவிக்க அரசு ஆலோசிப்பதாக அறியவந்தது.

இதேவேளை யாழ் தொலைத் தொடர்பு திணைக்களத்தில் கடமையாற்றிய அதிகாரிகள் தொலைத் தொடர் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் பலர் அனுராதபுரம் கொழும்பு, தொலைத் தொடர்வு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்படலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புப் பகுதியைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் கொழும்புக்கு ஆலோசனைக்காக அழைக்கப் பட்டிருக்கிறார் (அ-10)

பிரயாண ஒழுங்குகள்

● நோர்வே ● லண்டன்
● ஜேர்மனி ● சிங்கப்பூர்
● அவுஸ்திரேலியா
● சவூதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கான உங்கள் பிரயாண ஒழுங்குகளை உடனுக்குடன் செய்துகொள்ள உடனடியாக எமது அலுவலகத்தில் சந்தித்து பதிவுசெய்து கொள்ளவும்.

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS
றை ஸ்ரார் றவல்ஸ்
இல 6,நவீன சந்தை (மேல் மாடி),
யாழ்ப்பாணம்.

மு கு. யாழ்நகர் நிலைமை சீரற்று எமது அலுவலகம் மூடப்பட்டிருந்தால் உங்கள் நலன்கருதி ஏற்பாடு செய்யப்பட்ட கீழ்வரும் முகவரிகளில் தொடர்புகொள்ளவும்.

1. 71, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. வ. குகராசா, மயிலியற்புலம், கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
3. ந. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீடு திகதி 13 - 01 - 1987

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 N 28 தொலைபேசி. 24805, 22078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org